**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.37/2019**
**PW4**

| | | |
|---|---|---|
| Name | : | திருமலை |
| Father's Name | : | முத்துகிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.07.2025.
A1,2, 4 to 17 present.

**முதல் விசாரணை**

நான் ஐயம்பாளையம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். நான் ஐயம்பாளையம் ஊராட்சி மன்றத்தில் துணை தலைவராக இருந்து வருகிறேன் . ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என் பக்கத்து உரை சேர்ந்தவர்கள் . இந்த வழக்கில் இறந்து போனவரை எனக்கு தெரியாது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு தேதி ஞாபகம் இல்லாத ஒரு நாள் காலையில் நான் 7 மணிக்கு ஐயம்பாளையம் ரவுண்டனா பைபாஸ் அருகே நடை பயிற்சிக்கு சென்றபோது ஏரிக்கரை மேலே உள்ள சாலையில் டாரஸ் கன்டெய்னர் லாரி எரிந் து கொண்டிருந்தது. அங்கே ஊர் காரர்கள் ஒன்றாக இருந்தார்கள் . என்னவென்று கேட்டதற்கு யாரும் எப்படி நடந்தது என்று தெரியவில்லை என்று சொன்னார்கள் . என்னை இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் கடந்த 02.05.2013 ம் தேதி நானும் எங்கள் ஊர் தலைவர் பாபு என்பவரும் எனது சொந்த வேலை காரணமாக திருவண்ணாமலைக்கு இருசக்கர வாகனத்தில் சென்று வந்தோம் என்றும், அதிகாலை 1 மணியளவில் எங்கள் ஊர் பக்கம் உள்ள அத்தியந்தல் ஏரிக்கரையில் ஒரு கண்டெய்னர் லாரி தீப்பட்டு எரிந்ததை

பார்த்தோம் என்றும் , நானும் பாபுவும் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு அருகே சென்றபோது பின்னர் பெயர்கேட்டு தெரிந்து ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த ஜப்ருகான் என்பவர் கூச்சல்போட்டு சைகை காட்டி இந்தியில் தன்னை காப்பாற்றுமாறு சொன்னார் என்றும், அப்போது லாரி எறிந்துகொண்டிருந்த வெளிச்சத்தில் எங்கள் ஊருக்கு அருகே உள்ள ஊரான பெரிய கோட்டாங்கள் கிராமத்தை சேர்ந்த வேலு மகன் முருகன் , அயோத்தி மகன் பார்த்திபன் , வேலுமகன் ஏழுமலை, காமராஜ் த.பெ. கோவிந்தசாமி, பட்டுசாமி த.பெ. முருகேசன் ஆகியோர் எங்களை பார்த்து வீட்டு பக்கம் ஓடிச்சென்றார்கள் என்றும் , பின்னர் நானும் பாபுவும் , ஜாப்ருகானும் சேர்ந்து எரிந்துகொண்டிருந்த லாரி பதிவு எண் . HR55N6976-ன் ஓட்டுநர் சர்கார்கான் என்பவரை தீவிபத்தில் இருந்து காப்பற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும் , அங்கிருந்து அவர் மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்றும், எங்கள் ஊர் அருகில் உள்ள ஊரான அத்தியந்தல், பெரியகோட்டாங்கல், ஒட்டகுடிசல், ஐயம்பாளையம் , சின்னப்பாளையப்பட்டு ஆகிய ஊர்களை சேர்ந்தவர்களை எனக்கு நன்கு தெரியும் என்றும் , மேற்படி விபத்தில் நானும் பாபுவும் சென்று பார்த்தோம் என்றும் , பெரியகோட்டாங்கல் கிராத்தை சேர்ந்த மேற்படி ஆஜர் எதிரிகள் முருகன் , பார்த்திபன், ஏழுமலை, காமராஜ், பட்டுசாமி அவர்கள் தப்பிச் சென்றதை லாரியை எரித்து தீ வைத்ததை பார்த்தோம் என்றும் , மற்றவர்கள் இருட்டில் மறைந்திருந்ததால் அவர்களை சரியாக பார்க்கவில்லை என்றும் , மேற்படி லாரியின் கிளீனர் ஜப்ருகான் கொடுத்த புகாரின் பேரில் திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்று கூறிவிட்டு , தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.